1971 சூலை 30]

இடங்களைப் பெறுகிருர்கள். அதில் நிறமை படைத்தவர்களும் போட்டியில் சேர்ந்துகொண்டு சிறந்த முறையில் வெற்றி பெறக் கூடியவர்களாகவும் பலர் இருக்கிருர்கள்.

Apprentice Teachers' Scheme

*552 Q.—Thiru K. P. GOPAL : Will Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that all the teachers enrolled in the Apprentice Teachers' Scheme have been provided with jobs;

(b) if so, the details thereof; and

(c) if not, the reasons therefor

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எழாது.

(உ) 1970–71-ல் 6,500 தொழில் பழகு ஆசிரியர் பதவிகள் ஏற் படுத்தப்பட்டன. தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின்கீழ் 1970-71-ல் வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை 25,498. 24—6—1971 வரை நியமிக்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர்கள் எண்ணிக்கை 3,697 ஆகும். தொழில் பழகு ஆசிரியர் திட்டம் 1970–71-ல் பிந்தியே தொடங்கப்பட்டதால் இன்னும் கூடுதலாகத் தொழில் பழகு ஆசிரியர் பதவிகளை அவ்வாண்டில் நிரப்ப இயலவில்லை. மேலும் தனியார் பள்ளி நிறுவனங்கள், இத்திட்டம் தங்கள் நியமன அதிகாரத்தில் குறுக்கிடாக அமையும் என்ற தவருன கருத்தில், திட்டத்தைச் செயல்படுத்த ஓரளவு தயக்கம் காட்டினர். இந்த ஐயப்பாடுகளைப் போக்கும் வண்ணம், திட்ட விதிகள் இப்பொழுது திருத்தப் பட்டுள்ளன. இத்திட்டம் 1971–72-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

திரு. கே. பி. கோபால்: தலைவர் அவர்களே, அப்ரன்டீஸ் டீச்சர்ஸ் திட்டத்தின்கீழ், வேலைதேடித் தரும் நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஆசிரியர் அனைவருக்கும் வேலை தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான்கு, ஐந்து ஆண்டுக்காலம், ஆசிரியர் பயிற்சி பெற்று, யாரும் சிபாரிசு இல்லாத காரணத்தால் வேலை கிடைக்காமல் தவிக்கும் ஆசிரியர்களுக்காக அரசு இப்படி ஒரு முடிவுக்கு வர வேண்டி வந்தது. சிபாரிசு கிடைக்காத ஆசிரியர்கள் பல இடங்களில் அலைந்து திரிந்து வேலை கிடைக்காத நிலைமை இருந்தது. அவர்களை யெல்லாம் தொழில் பழகு ஆசிரியராக எடுத்துக்கொண்டு, அவர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம் என்று அரசு கருதி, 1966, 1967-வது ஆண்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு முதலில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் 1968-ல் பயிற்சி பெற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் 1969-ல் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட வேண்டுமென்றும் செய்வது என்று யோசிக்கப்பட்டது. அதன் காரணமாக 6,500 ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. வருஷ வாரியாக, ஒரு பட்டியல் தயார் செய்துகொண்டு ஒவ்வொரு

வருஷமாக எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்று முறைப்படுத்தப் பட்டது. பட்டியலில் உள்ளவர்களை யாரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டது. பர்மனென்ட் வேலை கிடைக்கும்போது அவர்களையே அந்த இடத்தில் பர்மனென்ட் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. தனியார் பள்ளிகளில் இத்தகைய ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், பின்னால் நிரந்தர மாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். இறுதியாக இந்த ஆண்டு 1970 வரையில் தேர்ச்சி பெற்றவர்களை யாரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்ட வர்களை எடுத்துக்கொள்ளலாம் என்றும் வகை செய்திருக்கிறோம்.

தனியார் பள்ளிகளில் தயக்கம் காட்ட முடியாத அளவிற்கு வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 6,500 ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 6 வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் 3 ஆயிரம் இடங்களும், 11 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் 2 ஆயிரம் இடங்களும், 14 முதல் 17 வயது வரையுள்ள குழந்தை களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் 1,500 இடங்கள் என்கிற வகையில் 6,500 ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அப்பரன்டீஸ் டீச்சர்ஸ் வயதின் அடிப்படையிலே அவர்களை நியமனம் செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வயதின் அடிப்படையில் தர இயலாது. அவர்கள் வெற்றிபெற்று இரண்டு மூன்று ஆண்டுக்காலம் வரையில் வேலைக்காக அலைந்து பின்னர் ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறார்கள். சிலர் பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறார்கள். விதவைப் பெண் களாக இருப்பவர்களுக்குச் சிறிது சலுகை காட்ட வேண்டுமென்கிற முறை இருக்கிறது.

கோழம்பேட்டையிலுள்ள குழாய்க்கிணறு

* 553 வினா: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் தாலுக்கா, கோழம்பேட்டையில் 1969-ம் ஆண்டில் நிறுவப்பட்ட சமுதாயக் குழாய்க் கிணற்றுக்கு ஆன செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ரூ. 13,103.29.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரி டெல்டாப் பகுதியிலே உள்ள எல்லாக் கிராமப் பகுதிகளுக்கும் இதை விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி முழுத் திட்டம் இல்லை. கூடுமானவரையில் பல இடங் களில் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் கருத்து. மாவட்ட